சகாதேவர் அருளிச்செய்த

## அநுபோக

# நவக்கிரஹ ஆருடம்

123




Δ : 864
N55
54992

ுத்தகசாலை

தெரு கொழும்பு.

Digitized by Roja Muthiah Research Library

உ

சாஸ்திரக் கொடியுடைய

**சகாதேவர் அருளிச் செய்த**

**அனுபோக**

# நவக்கிரஹ ஆரூடம்.

... OF BOOKS
7 - OCT 1955
MADRAS

இவை

F. R. M. சாமி

அவர்களால் இயற்றியது

**சரஸ்வதி புத்தகசாலை**

**175, செட்டியார் தெரு கொழும்பு**

**:ாபிரைட் 1955 விலை அணு 12**

Digitized by Roja Muthiah Research Library

Digitized by Roja Muthiah Research Library

# இந்த ஆரூடம் பார்க்கும் விபரம்.

இதை முதலில் நல்ல சுபவேளை பார்த்து ஓர் இடத்தில் சுத்தஞ் செய்து மஞ்சளால் பிள்ளையாரை வைத்து புஷ்பம் சாத்தி தாம்பூலம் பழம் அல்லது வெல்லம் படைத்து கர்ப்பூர தூபம் காட்டி 9-பலகரை எடுத்து 9-தடவை குலிக்கிப் போட்டு ஷை பலகரை மேல்புரம் திரும்பி இருப்பதை ஒவ்வொரு விசையும் ஓர் காகிதத்தில் வரைந்து 9-விசை முடிந்த பிறகு மொத்த துகையைக் கூட்டி 9-தால் வகுத்து நின்ற மிச்ச துகையை 4-ஆனல் தாங்கள் கருத்து வைத்த பேஜி முதல் 4-வது பக்கம் 4-வது வரியில் பார்த்து அதின சுபாசுபங்களை அறிந்துக்கொள்ளலாம் 6-ஆனல் 6-வது பக்கம் 6-வது வரியில் அறிந்து கொள்ளவும் சரி 9-ஆனலும் நிலுவை இல்லாவிட்டாலும் மறுவிசை போட்டு தெரிந்துக் கொள்ளுங்கள்.

58752

Digitized by Roja Muthiah Research Library

# இதனுள்ளடங்கிய ஆரூட அட்டவணை.

ஆரூட விவரம் பக்கம் நெ.


| | |
|---|---|
| நினைத்த காரியம் ஆகுமா ஆகாதா | 1 |
| இஜ்ஜினனம் மேன்மைக்கு வருமா வாராதா | 2 |
| இந்தராஜனை யாசித்தால் சுகம் கிடைக்குமா | 3 |
| இவ்விசை அதிகாரபதவி உண்டோ இல்லையோ | 4 |
| இன்னகருக்கு பயமுண்டா இல்லையா | 5 |
| கண்டகினவு மெய்யோ பொய்யோ | 6 |
| இவ்விலைவாசி யேறுமோ குறையுமோ | 7 |
| இவ்வருஷம் மழையுண்டா இல்லையா | 8 |
| இன் நக்ஷத்திரத்தில் மழை பேயுமா பேயாதா | 9 |
| ஊருக்கு சென்றிருப்பவர் வருவாரோ வரமாட்டாரோ | 10 |
| இவ்வூருக்கு போனால் காரியம் பூர்த்தியாகுமா ஆகாதா | 11 |
| இவ்வருஷம் நல்ல விளைவுண்டோ இல்லையோ | 12 |
| விவசாயம் நடத்தினுல் லாபம் உண்டோ இல்லையோ | 13 |
| இந்த வியாபாரஞ் செய்தால் லாபமுண்டா இல்லையா | 14 |


Digitized by Roja Muthiah Research Library

| ஆரூட விவரம் | பக்கம் நெ. |
| --- | --- |
| இம்மாடு வாங்கினால் நல்ல சரவல் உண்டா இல்லையா | 15 |
| இந்த எருது வாங்கினால் நலமா கெடுதியா | 16 |
| இவ்வயிமான கன்னிகையை கொண்டால் சுகமுண்டா | 17 |
| இக்குதிரையை கொண்டால் நல்லதா கெடுதியா | 18 |
| இப்பொருளை வாங்கினால் லாபமுண்டா நஷ்டமுண்டா | 19 |
| இத்தான்யத்தை நிறுத்தினால் பின்னுக்கு லாபமுண்டா | 20 |
| இவ்வைத்தியரால் வியாதி தீருமோ தீராதோ | 21 |
| இவ்வியாதி தீருமோ தீராதோ | 22 |
| இவ்விடு வாங்கினால் சுகமுண்டா கஷ்டமுண்டா | 23 |
| இம்முஹூர்த்தத்தில் கலியாணம் நடத்தினால் நலமா | 24 |
| இப்பெண்ணைக் கேட்டால் தருவாரோ தரமாட்டாரோ | 25 |
| இப்பெண்ணை வாங்கினால் சுகமுண்டா கஷ்ட முண்டா | 26 |


Digitized by Roja Muthiah Research Library

| ஆரூட விவரம் | பக்கம் ஙெ. |
| --- | --- |
| இவ்விசை கலியாண மாகுமா ஆகாதா | 27 |
| இந்த வேலைக்கு இவரையனுப்பினால் பூர்த்தியாகுமா | 28 |
| தப்பிபோன மாடு வருமோ வராதோ | 29 |
| இவ்விட்டில் போனபொருள் வருமோ வராதோ | 30 |
| மனதிலெண்ணிய காரியம் ஆகுமோ ஆகாதோ | 31 |
| இக்கடன் வருமோ வராதோ | 32 |
| இந்த கடன் தீருமோ தீராதோ | 33 |
| இவருடன் கூடிவாழ்ந்தால் சுகமா கஷ்டமா | 34 |
| இவருக்கு குழந்தைகள் உண்டோ இல்லையோ | 35 |
| இவருக்கிப்போது பிரக்குங் குழந்தை ஆணோ பெண்ணோ | 36 |
| இக்குழந்தைக்கு பொருள் உண்டோ இல்லையோ | 37 |
| இக்குழந்தை பிறந்த முஹூர்த்தம் நல்லதா கெடுதியா | 38 |
| இப்பெண் புஷ்பவதியான லக்கினம் நலமா கெடுதியா | 39 |
| இவருடன் சண்டைசெய்தால் ஜயமா அபஜயமா | 40 |
| இந்த ராஜனிடம்பேசினால் இது ஆகுமா ஆகாதா | 41 |


Digitized by Roja Muthiah Research Library

ஆருட விவரம் பக்கம் நெ.

இவர்சொல்லப்போகிற பொய்நிற்குமா நிற்காதா 42
இவரை கடன் கேட்டால் தருவாரோ தரமாட்டாரோ 43
இவருக்கு கடன் கொடுத்தால் வருமோ வராதோ 44
இவருக்கு மேண்மையுண்டோ இல்லையோ 45
இவருக்கு வேலை கிடைக்குமோ கிடைக்காதோ 46
இவ்வருஷம் யுத்தம் நடக்குமோ நடக்காதோ 47
இவ்வருஷம் வேறுராஜன் வருவானோ வரமாட்டானோ 48
இந்தராஜன் ஜெயித்து வருவானோ ஜெயிக்கமாட்டானோ 49
இவ்விரோதம் தீருமோ தீராதோ 50
இப்பெண் இவருக்கு நலமா கெடுதியா 51
இவர் இப்பெண்ணுக்கு நலமா கெடுதியா 52
இவருக்கு பிரயாணம் உண்டோ இல்லையோ 53
இவர்பேச்சு உண்மையோ பொய்யோ 54
ஊருக்கு போயிருப்பவர் சுகமாயிருக்கிறாரா கஷ்டமாயிருக்கிறாரா 55

Digitized by Roja Muthiah Research Library

ஆரூட விவரம் பக்கம் நெ.

இவருடன் சமாதானம் ஏர்ப்படுமோ ஏர்ப்படாதோ 56

இப்பிரயாணம் போனால் சகுனமாகுமா சகுனமாகாதா 57

இவ்வூரை குத்துகைக்கு வாங்கினால் லாபமுண்டோ இல்லையோ 58

இவருடன் கைசண்டை செய்தால் ஜெலிக்குமா ஜெலிக்காதா 59

இவர் எந்த பக்கம் அதிகாரியாய்ப் போவார் 60

இப்போது வேட்டைக்கு போனால் வேட்டை கிடைக்குமா 61

இவ்விடத்தில் கணர் வெட்டினால் தண்ணிபடுமா படாதா 62

இப்புதை தோண்டினால் கிடைக்குமா கிடைக்காதா 63

இவருடன் சூதாட்டமாடினால் ஜெலிக்குமா ஜெலிக்காதா 64

இவர் பொருள் இவருக்கு நிலைக்குமா நிலைக்காதா 65


Digitized by Roja Muthiah Research Library

| ஆரூட விவரம் | பக்கம் ரெ. |
| --- | --- |
| இவரை யாசித்தால் பலமுண்டோ இல்லேயோ | 66 |
| இப்படையை எந்த பக்கமிருந்து ஜெயிக்கவேணும் | 67 |
| இப்பெண்ணுக்கு பொருளுண்டோ இல்லேயோ | 68 |
| இவரென்னவியாபாரம் செய்தால்சுகித்திருப்பார் | 69 |
| இந்தசரீரத்துக்கு எதைசாப்பிட்டால் சுகந்தரும் | 70 |
| இவருக்கு படிப்பு வருமா வராதா | 71 |
| இப்பொருள் கொண்டுவர அனுப்பினுல் வருமா வராதா | 72 |
| இவருக்கு ஜெயமுண்டோ இல்லேயோ | 73 |
| இப்பொருளே கேட்டால் தருவாரோ தரமாட்டாரோ | 74 |
| இவர்பேரில் சந்தேகம் கொள்ளலாமா வேண்டாமா | 75 |
| இவர்நேசம் விட்டுபோகுமா விட்டுபோகாதா | 76 |
| இவ்வூரிலிருப்பவரை வரவழைத்தால் வருவாரா வரமாட்டாரா | 77 |
| இப்போ இருக்குமிடம் நலமா கெடுதியா | 78 |
| ஓடிப்போனவர்கள் அகப்படுவாரா அகப்படமாட்டாரா | 79 |
| இக்கடன் நமதுபக்கம் திரும்புமோதிரும்பாதோ | 80 |
| இவருடன் சம்பந்தம் செய்யமுடியுமா முடியாதா | 81 |


Digitized by Roja Muthiah Research Library

ஆருட விவரம் பக்கம் நெ.

இந்த சண்டை நடக்குமா நடக்காதோ 82
தெய்வத்தை பிரார்த்தித்தால் சுகமுண்டா இல்லையா 83
இப்போது யாத்திரைக்குபோய் சுகத்துடன் வரலாமா 84
இப்போது கேட்டகேள்வி உண்மையோ பொய்யோ 85
இவ்விவ ஹாரத்துக்குபோனால் செலிக்குமோ செலிக்காதோ 86
இவரை கேட்டால் தருவாரோ தரமாட்டாரோ 87
இம்மருந்தினால் சுகந்தருமோ தராதோ 88
இவ்விருவருக்கும்சண்டைஉண்டோஇல்லையோ 89
இக்கேட்ட கேள்வி பலிக்குமா பலிக்காதா 90
இவர் சதா சந்தோஷத்துட னிருப்பாரா 91
இப்பெண்ணுக்கு இல்லறம் சுகந்தருமா தராதா 92
இக்குதிரை குட்டிக்கு என்னகெடுதியுண்டாகும் 93
இந்த ஆயுதம் வாங்கினால் நலமா கெடுதியா 94
இப்போது விரைவிதைத்தால் விளையுமா விளையாதா 95

**நவக்கிரஹ ஆருடம்.**

அட்டவணை

முற்றிற்று.

Digitized by Roja Muthiah Research Library

## கணபதி பூஜை.

### மூலமந்திரம்

ஓம் கணபதி மஹா கணபதி
ஐயும் கிலியும் சௌவும்
கணபதி ஹரி ஹரி
சீக்கிரம் சீக்கிரம் வா வா சுவாஹா
உரு 108 ஜபிக்க சித்தியாகும்.

### விநாயகர் பூஜை.

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப் புஜம்
ப்ரஸன்ன வ!தனம் த்யாயேத்
ஸர்வ விக்னப சாந்தயே.

### விநாயகர் விருத்தம்.

ஆதிகஜானன மூர்த்தி மனித ரெல்லாம், அவனியிலே பிறந்து இனிதாய் சுகதுக்கத்தை, நீதியுடன் அனுபவிக்கும் விகரந்தன்னை, நினதருளால் சொல்வதர்க்குன் னருளினாலே, நவக்கிரஹ ஆருடம், மனிதருக்கு சரியாகஅமைந்திருக்க தமதருளால் எழுதுகின்றேன் துணைசெய்வாயே.

சுபம்! சுபம்! சுபம்!

Digitized by Roja Muthiah Research Library

## நினைத்த காரியம் ஆகுமா ஆகாதா.

1. நினைத்தகாரிய மொருவரால்
[ஆலஸ்யமா யாகும்
2. ஊருக்கு போயிருப்பவர் 2-அல்லது
[4-நாளில் வருவார்
3. இப்பெண்ணை அவருக்கு கொடுத்தால்
[தனலாபமுண்டு
4. திரிடினவநிவனே மற்றொருவரிடம்
[வைத்திருக்கிரான்
5. இந்த ஆண்பெண்களில் பெண்
[முந்தி வருவாள்
6. கருதரித்த துண்மை சுகித்து வாழும்
7. இக்கடவுளை தியானித்தால்
[தரித்ரியம் வரும்
8. அவ்விடத்தில் பிரிந்தவர் சுகத்தோ
[டிருக்கிறார்
9. இப்பொருளை விர்ப்பார் வாங்காதீர்கள்

Digitized by Roja Muthiah Research Library

## இஜ்ஜீவனம் மேன்மைக்கு வருமா வராதா.

1. ஜீவனம் ஸ்திரமாகும் நாள்பேரில்
[சுக மேற்படும்

2. நினைத்த காரிய மாகாது

3. ஊருக்கு போயிருப்பவர் இன்று
[நாளை வருவார்

4. பெண்ணை இவருக்கு கொடுத்தால்
[சுகித்து வாழ்வார்

5. திருடினவ நிவனல்ல வீட்டு பெண்ணால்
[போச்சு வாராது

6. இந்த ஆண் பெண்களில் ஆண்
[முந்தி வருவான்

7. கருதரித்தது பொய் மேலுக்கு தரிப்ப
[துண்மை

8. கடவுளை தியானித்தால் சுகம்
[பொருள் கை கூடும்

9. விட்டு பிரிந்தவர் மற்றொரு ஸ்தலத்தி
[லிருக்கிறார்

Digitized by Roja Muthiah Research Library

## இந்த ராஜனை யாசித்தால் சுகம் கிடைக்குமா

1. ராஜனை யாசித்தால் சுகமில்லை கேடுவரும்
2. ஜீவனம் சுகமில்லை வேறு ஊருக்கு
[போனால் 2-மாதத்தில் சுகம்
3. நினைத்தகாரியம் இப்போதே கைகூடும்
4. ஊருக்குச் சென்றிருப்பவர்
10-நாளைக்குள் வருவார்
5. பெண்ணை யிவருக்கு கொடுத்தால்
[சதாதரித்திரியம்
6. திருடினவனிவனேயாவான்தரமாட்டான்
7. ஆண் பெண் இருவர்களில் பெண்
[முந்தி பிரசவிப்பாள்
8. கருவு தரித்திருப்ப துண்மை கவலை
[வேண்டாம்
9. கடவுளை பூசித்தால் சுகமில்லை
[வேறுநாடு செல்லவரும்

Digitized by Roja Muthiah Research Library

இவ்விசை அதிகாரபதவி உண்டோ
இல்லையோ.

1. அதிகாரபதவி யிவ்விசை கிடைப்பதரிது
2. ராஜனை யாசித்தால் நலம் பின்னுல்
[சுகமேர்ப்படும்
3. இந்த பெண்ணின் ஜீவனம் கஷ்டதரம்
4. நினைத்த காரியம் நாள்பேரில்
[ஜெயமடைவீர்
5. வூருக்கு போயிருப்பவர் லாபத்துடன்
[வருவார்கள்
6. பெண்ணை இவருக்கு கொடுப்பதே
[நலம் லக்ஷ்மீவாசம்
7. கள்ள நிவனல்ல பெண்திருடி
[சமீபத்திலில்லை வராது
8. ஆண் பெண் யிருவர்களும் இறந்து
[போவார்
9. கருவெண்பது பொய் மின்னுக்கு
[4-மாதம் நிர்க்கும்

Digitized by Roja Muthiah Research Library

## இன்னகருக்கு பயமுண்டா இல்லையா

1. நகருக்கு அன்னியராஜனல் கஷ்டம் [வந்து தீர்ந்துவிடும்
2. இவ்விசை அன்னியராஜனல் [மேல்பதவி கிடைக்கும்
3. இராஜனை யாசித்தால் பயந்தோன்றி [சுகம் கிடைக்காது
4. ஜீவனம் சுகமில்லை பின்னுக்கு [ஸ்திரம் ஆகும்
5. நினைத்தகாரியம் பயந்தோன்றி [தப்பிவிடும்
6. ஊருக்கு போயிறுப்பவர் அரசன் [கட்டளைக்குள்ளானர் ஆலஸ்யம்
7. பெண்ணை யிவருக்கு கொடுத்தால் [ஆணுக்கு தோஷம்
8. சூத்திர னொருவன் பொருள் வாங்கினன் [வராது
9. ஆண் பெண் இருவர்களில் [பிரசவித்து பெண் சாகும்

Digitized by Roja Muthiah Research Library

## கண்ட கினவு மெய்யோ பொய்யோ

1. கண்ட கினவு பொய் கவலைவேண்டாம்

2. நகரத்துக்கு பயமுண்டு கோட்டை
[பிடிப்பது

3. மேல்பதவிகிடைக்காது பயந்தோன்றும்

4. அரசனை காண்பதரிது ஆலஸ்யமாய்
[லாபம் வரும்

5. ஜீவனம் கடவுளை துதித்தால் ஐயமேற்
[பட்டு சுகித்து வாழலாம்

6. நினைத்த காரியம் மற்ெருரு கிராமத்தில்
[30-நாளிலாகும்

7. ஊருக்குபோயிருப்பவர் கவலையில்லை
[வர ஆலஸ்யம்

8. பெண்ணிவருக்கு கொடுத்தால்
[நாலுமாத வெளிபோவார்

9. திருடினவ னிவனல்ல இவ்வீட்டு
[பெண் திருடி

Digitized by Roja Muthiah Research Library

## இவ்விலைவாசி ஏறுமோ குறையுமோ

1. இச்சமயம் விலை குறைந்து பின்னுக்கு
[யேறும்
2. கண்ட கனவுவுண்மை ஜெயமடைவாய்
3. நகரத்துக்கு 4-வருடம் ராஜபயம்வுண்டு
4. இவ்விசை வேறுராஜனால் பதவி
[கிடைக்கும்
5. அரசனை நேசித்தால் சீக்கிரத்தில்
[லாபமுண்டாகும்
6. நடுதரமான ஜீவனம் ஏர்ப்படும்
[ஜெயமுண்டு
7. நினைத்த காரியம் உரவினரால்
[பூர்த்தியாகும்
8. ஊருக்கு சென்றிருப்பவர் இப்போதே
[வருவார்
9. பெண்ணிவருக்கு கொடுத்தால்
[கள்ளவழி யேர்ப்படும்



Digitized by Roja Muthiah Research Library

## இவ்வருஷம் மழையுண்டா இல்லையா

1. இவ்வருஷம் நல்ல மழையுண்டு நல்ல [விளைவுண்டு
2. விலை வாசி யேறி குறையும்
3. கண்ட கனவு பொய்யி மற்றொரு கனவு உண்மை வரும்
4. நகரத்துக்கு பயமில்லை கலஹங்கள் [நடந்தே தீரும்
5. இவ்விசை பதவி கிடைக்காது [பயமேர்ப்படும்
6. அரசனை நேசித்தால் அதிக சுக [ஜெயங்களுண்டு
7. அன்னியரானல் ஜீவனம் ஸ்திரமாகும் [கவலைவேண்டாம்
8. நினைத்த காரியம் ஓர் அய்யரால் [கைக்கூடும்
9. ஊருக்கு போனவர் கஷ்டத்துடனிருக் [கிறர் வர ஆலஸ்யம்

Digitized by Roja Muthiah Research Library

## இந்த நக்ஷத்திரத்தில் மழை
## பேயுமா பேயாதா

1. இந்த நக்ஷத்திரம் 1-ம் பாதத்தில்
[மழை பேயும்
2. இவ்வருஷம் அதிகமழை பேய்ந்து
[குறையாத விளைவு
3. விலைவாசி அல்பமாய் குறைந்து க்ஷேமம்
4. கண்ட நினைவு பொய்யல்ல
[உண்மை யாகும்
5. இந் நகரத்துக்கு பயமொன்றில்லை
6. இவ்விசை ராஜபதவியுண்டு
[ஸ்ரீகளுக்காகும்
7. இராஜனை நேசித்தால் கஷ்டம் ஏற்பட்டு
[தேசபிரஷ்டன்
8. பிழைப்ப தெவ்வித மென்றால்
[தற்சமய வழிதான்
9. நினைத்த காரியம் பூர்த்தி பண்ணினால்
[சுகமாகும்

Digitized by Roja Muthiah Research Library

## ஊருக்கு சென்றிருப்பவர் வருவாரோ வரமாட்டாரோ

1. ஊருக்கு போனவர் நொந்திருக்கிறர் [ஆலஸ்யமாய் வருவார்

2. இந்த நக்ஷத்திரத்தில் அல்பமழை [மாத்திரமுண்டு

3. இவ்வருஷம் மழை குறைவு விளைவு கம்மி

4. விலைவாசி குறைந்து சீக்கிரம் யேறும்

5. கண்டநினைவுஉண்மைஜெயமடைவாய்

6. நகரத்துக்கு பயம் அன்னியராஜனுல் [யுத்தம் வரும்

7. இவ்விசை ராஜபதவியில்லை சுகித்திருப் [பார்

8. இராஜனை நேசித்தால் பின்னுக்கு [சுகம் உண்டு

9. சுகபிழைப்பல்ல வேறு தேசம் [சென்ருல் சுகம் வரும்

Digitized by Roja Muthiah Research Library

## இவ்வூருக்கு போனால்
## காரியம் பூர்த்தி ஆகுமா ஆகாதா

1. இவ்வூருக்கு போனவேலை பூர்த்தி [ஆகாமல் உடனே வருவார்

2. வூருக்கு போயிருப்பவர் சீக்கிரமாய் [வருவார் கவலைவாணு

3. இந்நக்ஷத்திரம் இப்பாதத்தில் நல்ல [மழை பொழியும்

4. இவ்வருஷம் விசேஷமழையால் விளைவு [குறைவாகும்

5. விலைவாசி அதிகமாய் விற்பனை காட்டும்

6. கண்டகனவு பொய் கவலை வேண்டாம்

7. நகரத்துக்கு பயமில்லை வேறு அரசனால் [மனஸ்தாபம்

8. இவ்விசை ராஜபதவி கிடைத்து [மாறும் பயமில்லை

9. ராஜனை நேசித்தால் 3-மாதத்தில் [பொருள் வரும்

Digitized by Roja Muthiah Research Library

## இவ்வருஷம் நல்ல விளைவு உண்டோ இல்லையோ

1. இவ்வருஷம் நல்ல விளைவு உண்டோ [இல்லையோ

2. ஊருக்கு போனவேலை 4-மாதத்தில் [பூர்த்தி பண்ணிக் கொண்டு வருவார்

3. ஊருக்குபோயிருப்பவர் [சந்தோஷமாய் வருவார்

4. மழை இந் நக்ஷத்திரம் 1-ம் பாதத்தி [லில்லை 3-ம் பாதத்திலுண்டு

5. இவ்வருஷம் விசேஷ மழை பொழியும் [கவலைவேண்டாம்

6. விலைவாசி யேரி குறையும்

7. கண்ட கனவு பொய்யாகும் உடனே [மெய் கனவு வரும்

8. நகரத்துக்கு பயமில்லை வேறு அரசன் [வந்து போவார்

9. இவ்விசைராஜபதவி தெய்வபதவி [2-ம் கிடைக்கும்

Digitized by Roja Muthiah Research Library

## விவசாயம் நடத்தினால் லாபம் உண்டோ இல்லையோ

1. இவ் விவசாயத்தினால் லாபமுண்டு [செய்யலாம்
2. இவ்வருஷம் மழை குறைவு அல்ப [தான்யம் விளையும்
3. ஊருக்கு போனவேலை மத்தியில் பயந் [தோன்றி திரும்பினார்கள்
4. ஊருக்கு போனவர்க்கு கவலைவந்து [ஒருவரால் சுகித்து வாரார்கள்
5. இந்நக்ஷத்திரம் 2-பாதத்தில் பெரிய [தூத்தலுடன் மழையுண்டு
6. இவ்விசை காத்தும் இடியும் வுண்டு [மழை குறைவு
7. விலைவாசியேரி உடனே குறைந்து [விற்கும்
8. கண்டகனவுஉண்மைதான்பொய்யல்ல
9. நகரத்துக்கு பயமில்லை எவ்வித கவலை [வேண்டாம்

Digitized by Roja Muthiah Research Library

# இந்த வியாபாரம் செய்தால் லாபமுண்டா இல்லையா

1. இவ்வியாபாரத்தினுல் லாபமுண்டு [நோயும் வரும்
2. விவசாயம் செய்தால் பலமுண்டு [பொருள் சேரும்
3. இவ்விசை நல்ல விளைவு வளையும் [ஈசனருளால்
4. ஊருக்குப் போயிருப்பவர் வேலை [ஆலஸ்யமா முடியும்
5. ஊருக்குப் போயிருப்பவர் வருகிரார் [கவலைபடாதே
6. இன் நக்ஷத்திரத்தில் 14-ம் பாதம் [பெரியமழைபேயும்
7. இவ்விசை பெரியமழை பேய்ந்து [ஏரிகள் உடையும்
8. விலைவாசி அதிகப்படும் குறையாது
9. கண்டகனவு வுண்மையல்ல [ஸ்திரமாகாது

Digitized by Roja Muthiah Research Library

# இம்மாடு வாங்கினுல் நல்ல் கரவல் உண்டா இல்லையா

1. இம்மாடு நல்ல கரவலல்ல திருடர்கள்
[ஓட்டிபோவார்
2. வியாபாரம் செய்தால் லாபம்வுண்டு
[வேறொருவர் வாங்குவார்
3. விவசாயத்தினுல் லாபமில்லை நஷ்டம்
[வரும் பின்னுக்கு சுகம்
4. இவ்வருஷ அல்பவிளைவு விளஞ்சி
[தண்ணிக்கு கஷ்டம்
5. ஊருக்குபோ யிருப்பவர் வேலை
[ஜெயமாய் வருகிறார்
6. ஊருக்குபோ யிருப்பவர் கவலைபட்டு
[தாமஸமாய் வருவார்
7. இந் நக்ஷத்திரம் கடைசிபாதம் மழை
[பொழியும்
8. இவ்விசை அல்பமழை பேய்ந்து
[தரித்ரியம்
9. விலைவாசி யேரும் வாங்குவ ரில்லை

Digitized by Roja Muthiah Research Library

இந்த எருது வாங்கினுல் நலமா கெடுதியா

1. இந்த எருது வாங்கினுல் வாயுவியாதி
[உண்டாகும்

2. கரவல் மாடு வாங்கினுல் சுகமுண்டு
[கன்றுகள் விருத்தி

3. வியாபாரத்துக்கு போனுல் லாபமில்லை
[ஒருவரால் கடன் வரும்

4. விவசாயத்தினுல் பலனில்லை இராஜ
[னபகரிப்பார்

5. இவ்விசை கனத்த விளைவுகள் விளையும்

6. ஊருக்குபோ யிருப்பவர் அதிக
[லாபத்துடன் வருவார்

7. ஊருக்குபோயிருப்பவர் நொந்து நாள்
[பேரில் வருவார்

8. இன்ன க்ஷத்திரத்தில் மழையில்லை
[அதிக காற்றுண்டு

9. இவ்விசை நிதானமாய் மழை பொழியும்

Digitized by Roja Muthiah Research Library

## இவ்வபிமான கன்னிகையை கொண்டால் சுகமுண்டா

1. இக்கன்னியை கொண்டால் வேறொருவ
[ னல் ஓடிப்போகும்
2. எருது வாங்கினல் லாபமுண்டு
3. கரவல் மாடு வாங்கினல் நலமல்ல
[கெடுதி ஏற்படும்
4. வியாபாரம் செய்தால் நிதானத்தில்
[லாபங் கிடைக்கும்
5. விவசாயம் செய்தால் பிள்ளை பேரன்
[வரையில் தனமுண்டு
6. இவ்விசை ஸ்வல்ப விளைவு விளையும்
7. ஊருக்குப்போயிருப்பவர் வேலை
[ஆகாமல் வருகிறார்
8. ஊருக்குபோனவர் மத்தியிலிருந்து
[திரும்பி வருகிறார்
9. இன் நக்ஷத்திரம் 1-ம் பாதத்தில் தூத்
[தல் கண்டு மழைபேயும்

Digitized by Roja Muthiah Research Library

## இக்குதிரையை கொண்டால் நல்லதா கெடுதியா

1. குதிரை வாங்கினல் வியாதி வுண்டாகும் [வாங்காதீர்
2. இக்கன்னிகையை கொண்டால் [நல்லது சுகமடைவீர்
3. எருது வாங்கினல் வியாதி உண்டாகும் [வாங்காதீர்
4. கரவல்மாடு வாங்கினல் சுகமடைவாய் [சந்தான விருத்தி
5. வியாபாரம் செய்தால் லாபமில்லை [இருப்பதெல்லாம் போகும்
6. விவசாயம் செய்தால் லாபமுண்டு [நல்லசுகம் தரும்
7. நல்லவிளைவு விளையும் லாபம்தரும் [இவ்வருடம்
8. ஊருக்கு போனவேலை முடிந்து [சந்தோஷமாய் வருவார்
9. ஊருக்குபோ யிருப்பவர் கவலைபட்டு [வருவார்

Digitized by Roja Muthiah Research Library

## இப்பொருளை வாங்கினுல்
## லாபமுண்டா நஷ்டமுண்டா

1. இப்பொருளை வாங்கினுல் லாபம்
[கிடைக்காது

2. குதிரை வாங்கினுல் சுகம் ராஜ
[அனுசரணை வுண்டு

3. கன்னிகையை கொண்டா லாகாது
[பொருள் திருடி போவான்

4. எருது வாங்கினுல் நலம் மிக சுகித்து
[வாழ்வீர்

5. கரவல் மாடு வாங்கினுல் சுகமுண்டு
[ஜாஸ்தி பால்தரும்

6. வியாபாரம் செய்தால் அதிகலாபம்
[கிடைக்கும்

7. விவசாயம் செய்தால் சுகம்
[கிடைக்காது

8. இவ்விசை நல்ல விளைவு வளையும்

9. ஊருக்குபோன வேலை ஸ்வல்பமாய்
[வருகிரார்

Digitized by Roja Muthiah Research Library

## இந்தான்யத்தை நிருத்திஞல் பின்னுக்கு லாபமுண்டா

1. தான்யம் பின்னுக்கு விற்ருல் லாபம் [வரும்
2. பொருள் வாங்கி நிருத்திஞல் நாள்பேரில் [லாபமுண்டு
3. குதிரையை வாங்கிஞல் கெடுதி குட்டி [உயிருடன் பிறந்து சாகும்
4. கன்னிகை வேண்டாம் சாவுகுழந்தை [பெறுவாள்
5. எருதுவாங்கிஞல் நல்லலாபம்கிடைக்கும்
6. கரவல் மாடுவாங்கிஞல் கன்றுகள் [விருத்தியாகும்
7. வியாபாரத்திஞல் லாபமுண்டு சதாகால [மும் நீடூழியாய் நடக்கும்
8. விவசாயம் செய்தால் இருந்ததுபோயி [கடன் ஏற்படும்
9. இவ்விசை அல்பவிளைவு விளஞ்சி கஷ் [டம் காட்டும்

Digitized by Roja Muthiah Research Library

# இவ்வைத்தியரால் வியாதி தீருமோ தீராதோ

1. இவ்வைத்தியரால் தீரும் வேரே வைத்
[தியம் பார்க்காதே

2. தான்யம் நிருத்தினல் விலைவாசி சரி
[லாபம் கிடைக்கும்

3. பொருளை வாங்கினல் லாபம் காட்டாது
[வாங்க வேண்டாம்

4. குதிரை வாங்கினல் லாபமுண்டு வாங்கி
[னல் சுபம்

5. கன்னிகையை கொண்டால் சுகித்து
[லாபத்துடனிருப்போம்

6. இந்த எருது வாங்காதே வேறு எறுது
[வரும்

7. கரவல்மாடு வாங்கினல் கெடுதி ஏற்படும்

8. வியாபாரம் செய்தால் முந்தி நஷ்டம்
பின்னுக்கு லாபம்

9. விவசாயம் செய்தால் நஷ்டம் வரும்

Digitized by Roja Muthiah Research Library

# இவ்வியாதி தீருமோ தீராதோ

1. இவ்வியாதி கடவுளை தியானித்தால் [கட்டாயம் தீரும்

2. இவ்வைத்தியரால் 3-மாதத்தில் [தீர்ந்துவிடும்

3. தான்யம் நிறுத்தினுல் விலையில்லை [இப்போதே விற்றுவிடு

4. பொருளை வாங்கினுல் லாபந்தராது [சீக்கிரத்தில் விற்கும்

5. குதிரை வாங்கினுல் லாபமில்லை [அபஜயம் வரும்

6. கன்னிகையை வாங்கினுல் ஆகாது [தனநஷ்டம் ஏற்படும்

7. எருது வாங்கினுல் லாபத்துடன் [ஜெயமடைவாய்

8. கரவல்மாடு வாங்கினுல் சுகந்தரும் [மேன்மைதரும்

9. வியாபாரம் செய்தால் கடன்காரர் ஆய் விடுவீர்

Digitized by Roja Muthiah Research Library

# இவ்வீடுவாங்கினுல்

## சுகமுண்டா கஷ்டமுண்டா

1. வீடுவாங்கினுல் சுகம்தராது வியாதியும் [கலகம்வரும்
2. இவ்வியாதி தெய்வபிரார்த்தனையால் [தீறும்
3. இந்த டாக்டருமாற்றி வேறுடாக்டரால் [ஆறிவிடும்
4. தான்யம் நிறுத்தினுல் விற்காது ராஜன் [கேழ்ப்பான் நஷ்டம்
5. பொருளை வாங்கினுல் லாபந்தரும் ராஜ [ஸ்னேகம் தரும்
6. குதிரை வாங்கினுல் ஆகாது தரித்ரியம் [பின்னுக்கு லாபம்
7. கன்னிகையை வாங்கினுல் நலமல்ல [பின்னுக்கு கஷ்டம்
8. எருது வாங்கினுல் கெடுதி மத்யலாபம் [தரும்
9. கரவல்மாடு வாங்கினுல் சுகத்தோடு [கன்றுகளுடன் இருப்பாய்



Digitized by Roja Muthiah Research Library

## இம்முஹூர்த்தத்தில்
## கல்யாணம் நடத்திஞல் நலமா கெடுதியா

1. இம்முகூர்த்தம் நலமல்ல பிராணனுக்கு [ஹானி

2. வீடுவாங்கினுல் சுகம் தரும் பொருள் [கைகூடும்

3. வியாதி தீராது பிராணத்துக்கே ஹீனம்

4. இவ்வைத்தியரால் எல்லாநோயும் தீரும் [கவலை வேண்டாம்

5. தான்யம் நிருத்தினுல் அதிகலாபத்துடன் [விற்பாய்

6. பொருளை வாங்கினுல் கொஞ்சலாபத் [துடன் விற்பாய்

7. குதிரைவாங்கினுல் தரித்ரியம் வரும் [வாங்காதே

8. கன்னிகையை வாங்கினுல் உடனே [அல்பலாபம் தரும்

9. பசு கன்று வாங்க வேண்டாம் [களவாடி ஓட்டிபோவார்

Digitized by Roja Muthiah Research Library

## இப்பெண்ணை கேட்டால் தருவாரோ தரமாட்டாரோ

1. பெண்ணை கேட்டால் தருவார் அது [சீக்காளி வேண்டாம்
2. இம்முகூர்த்தம் நடத்தினால் சுகமுண்டு
3. வீடுவாங்கினால் சுகமில்லை கிரகம்வுண்டு
4. தெய்வத்தை பிரார்த்தித்தால் [வியாதி தீரும்
5. இவ்வைத்தியரால் வியாதி தீரும்
6. தான்யத்தை நிறுத்தினால் விலைவாசி [யில்லை நஷ்டம் வரும்
7. இப்பொருளை வாங்கினால் நாள்பேரில் [விற்பனையாகும்
8. குதிரை வாங்கினால் மின்னுக்கு போகாது [தரித்திரியம் முண்டு
9. கன்னிகையைகொண்டால் சுகத்துடன் [வீடுவிருத்தி

Digitized by Roja Muthiah Research Library

# இப்பெண்ணை வாங்கினுல் சுகமுண்டா கஷ்டமுண்டா

1. இப்பெண்ணை வாங்கினுல் ஆகாது [மத்தியில் போய்விடும்

2. பெண்ணை கேட்டால் ஒருவர் மூல்யம் [பாடியும்

3. இம் முகூர்த்தத்தில் நடத்தினுல் சுகம் [பின்னுக்கு கஷ்டம்

4. வீடுவாங்கினுல் சுகமில்லை மத்தியில் [விழுந்துபோகும்

5. வியாதி தனக்குத்தான் குணமாகும்

6. இவ்வைத்தியனுல் வியாதி தீராது [அதிகப்படும்

7. தான்யத்தைநிறுத்தினுல் விலைவாசியில்லை

8. பொருளை வாங்கினுல் லாபந்தரும் [வாங்கலாம்

9. குதிரை வாங்கினுல் கெடுதிவரும் [வாங்காதீர்கள்

Digitized by Roja Muthiah Research Library

# இவ்விசை கலியாணமாகுமா ஆகாதா

1. இவ்விசை கலியாணமாகாது வலிவு
[கம்மி

2. பெண்ணை வாங்கினால் சுகமேற்படும்
[கொடுப்பவர் சுகவாழ்வு

3. பெண் கொடுப்பவர் நல்லோரல்ல
[பலாத்காரம் பண்ணுவார்

4. இம் முகூர்த்தத்தில் கலியாணம்
[நடத்தலாம் சுகம்

5. வீட்டைவாங்கினால் சுகமுண்டு
[மேன்மைதரும்

6. வியாதி நாள்பேரில் வலித்து தானாய்
[சுகந்தரும்

7. இவ்வைத்தியரால் வியாதி நாள்பேரில்
[தீரும்

8. தான்யம் நிறுத்தினால் விலைவாசி
[சீக்கிரத்தில் லாபம் வரும்

9. பொருளை வாங்கினால் அதிகலாபம் தரும்

Digitized by Roja Muthiah Research Library

## இந்த வேலைக்கு இவரை அனுப்பினால் பூர்த்தி ஆகுமா

1. ஊருக்கிவனை அனுப்பினால் அவர் எதுர் [நோக்கி சும்மா வருவார்
2. இவ்வருஷம் கட்டாயம் கலியாணம் [நடக்கும்
3. அப்பெண்ணை வாங்கினால் சுக [முண்டாகும்
4. அப்பெண்ணை கேழ்க்கும்போதே கஷ் [டம் வரும் கேழ்க்காதே
5. இம்முகூர்த்தத்தில் நடத்தினால் [சுகித்து வாழ்வாய்
6. வீடுவாங்கினால் லாபமுண்டு சுகம்தரும்
7. வியாதி தானுய்தீரும் கவலை வேண்டாம்
8. வைத்தியரால் வியாதி நாள்பேரில் தீரும்
9. தான்யம் நிருத்தினால் விலை குறைந்து [திருடரால் நஷ்டம்

Digitized by Roja Muthiah Research Library

## தப்பிபோன மாடு வருமோ வராதோ

1. தப்பியமாடு தானகவரும் தேட
[வேண்டாம்

2 ஆருக்கவரை யனுப்பினல் வேலையாய்
[சுபவார்த்தை கொண்டு வருவார்

3. இவ்விசை கலியாண மாகாது கெடுதி
[உண்டாகும்

4. பெண்ணை வாங்கினல் சுகமில்லை
[அல்பாயுசு

5. கேட்டால் பெண்ணை உடனே
[கொடுப்பார்

6. இம்முகூர்த்தத்தில் நடத்தினல்
[சுகமுண்டு சர்வசித்தி

7. இவ்விட்டை வாங்கினல் சுகமில்லை
[தரித்ரியம் வரும்

8. இவ்வியாதி உடனே திரும் கவலை
[வேண்டாம்

9. இவ்வைத்தியரால் வியாதி திராது
[காட்டிஞல் அதிகமாகும்

Digitized by Roja Muthiah Research Library

## இவ்வீட்டில் போனபொருள் வருமோவராதோ

1. இவ்விட்டில் போனபொருள் வீட்டு
[பெண்ணால் போச்சுது வரும்

2. தப்பிபோன மாடு கீழ்திசையிலிருக்கிறது
[தெய்வீகமாய் வரும்

3. இவ்வூருக் காளனுப்பினல் வேலை
[ஆகாது வேராளனுப்பினலாகும்

4. இக்கலியாண மொருவரால் ஒடைந்து
[போகும்

5. இப்பெண்ணை வாங்கினல் சுகமுண்டு
[சந்தான விருத்தி

6. இப்பெண்ணை கேட்டால் தருவார்
[ஒருவரால் தடையாகும்

7. இம்முகூர்த்தத்தில் நடத்தினல் சுகம்
[பின்னுக்கு கெடுதிகாட்டும்

8. இவ்விடு வாங்கினல் சுகம் லாபம்
[கிடைக்கும்

9. இவ்வைத்தியனல் வியாதி திரும்பிவரும்

Digitized by Roja Muthiah Research Library

## மனதிலெண்ணிய காரியம் ஆகுமோ ஆகாதோ

1. உன்மனதில் நினைத்த காரியம் [ஒருவரால் பிரயாணமாவீர்
2. இவ்வீட்டில் திருடுபோனபொருள் [வேறொருவர் கையிலிருக்கு வரும்
3. தப்பித்துபோனமாடு வேறுவூறிலிருக் [கிறது வரும்
4. இவ்வூறுக்கிவரை அனுப்பினுல் வேலை யாகாது ஆனுலும் குறைவு
5. இவ்வருஷம் கலியாணமாகும் கவலை [வேண்டாம்
6. இப்பெண்ணை வாங்கினுல் சுகமுண்டு [சந்தானவிருத்தி
7. இப்பெண்ணை கேட்டால் தருவார் [விருத்தியாகும்
8. இம்முகூர்த்தத்தில் நடத்தினுல் [மேன்மைதரும் நடத்தப்படும்
9. இவ்வீடுவாங்கினுல் லாபமுண்டு ஆனுல் [பின்னுக்கு கடன் வரும்

Digitized by Roja Muthiah Research Library

## இக்கடன் வருமோ வராதோ

1. இக்கடன் நிர்பந்தமில்லாமல் வராது
2. மனதிலெண்ணிய காரியம் ஒருவர்
[மூல்யமாய் பூர்த்தியாகும்
3. இவ்வீட்டில் போனபொருள் வீட்டி
[லிருக்கும் சிறுபிள்ளையால்போச்சுவரும்
4. தப்பிபோனமாடு மேர்க்கே காட்டிலிருக்
[கிறது தானுப் வரும்
5. இவ்வூருக்கு ஆளையனுப்பினுல் வேலை
[யாய் லாபமாய் வருவார்
6. இவ்வருஷம் ஆலஸ்யமாய் கலியாணம்
[நடக்கும்
7. இப்பெண்ணை கொண்டால் சுகமில்லை
[மனஸ்தாபம் வரும்
8. இப்பெண்ணை கேட்டால் ஆலஸ்யமாய்
[தருவார்
9. இம்முகூர்த்தம் நடத்தினுல் நலமல்ல
[கேடுவரும்

Digitized by Roja Muthiah Research Library

## இந்த கடன் தீருமோ தீராதோ

1. இக்கடன் தீர்ந்துவிடும் கவலைவேண்
[டாம்
2. இக்கடன் பாதிக்குபாதி விரோதத்தால்
[வரும்
3. உன்மனதிலெண்ணிய காரியம்
[கட்டாயமாகாது
4. இவ்விட்டில் போனபொருள் அயல்
[விட்டிலிருக்கிறது வரும்
5. தப்பித்தமாடு தென்பக்கமிருக்கிறது
[தேடவேண்டாம்
6. இவ்வூருக்கு ஆளையனுப்பினல் வேலை
[யாகும் சுபவார்த்தை வரும்
7. இவ்வருஷம் கலியாணமாகாது வலிவு
[கம்மி ஏற்படும்
8. இப்பெண்ணை வாங்கினல் மிக குடும்ப
[மேன்மை தரும்
9. இப்பெண்ணை கேட்டால் தருவார்
[அவர்களுக்கு பொருளாசை வுண்டு

Digitized by Roja Muthiah Research Library

## இவருடன் கூடிவாழ்ந்தால் சுகமா கஷ்டமா

1. இவருடன் கூடிவாழ்ந்தால் கடன்கார
[ராவீர்கள்

2. இப்போது கடன் தீராது பின்னுங்
[கொருவரால் நிர்ப்பந்தமாய் தீரும்

3. இக்கடன் வுயிறிருக்குமளவில் ஸ்திர
[மாய்வராது

4. உன்மனதி லெண்ணியகாரியம் பெண்
[விஷயம் ஆகாது ஆனல் தனலாபம்

5. இவ்விட்டில் போனபொருள் விட்டில்
[பெண் திருடினல் வரும்

6. தப்பித்த மாடு திருடர்கள் ஓட்டிபோய்
[மத்தியில் விடப்பட்டு வரும்

7. அவ்வூருக்கு போனவர் வேலையாகாமல்
[கவலையாய் வருவார்

8. இவ்வருஷம் கலியாணம் ஒருவரால்
[பூர்த்தியாகும்

9. இப்பெண்ணை வாங்கினல் நலமல்ல
[கொடுக்கவருவார் வாங்காதீர்

Digitized by Roja Muthiah Research Library

## இவருக்கு குழந்தைகள் உண்டோ இல்லையோ

1. இவருக்கு சக்திருரைவு அதனல் சந்
[தானம் கம்மி

2. இவருடன் வாழ்ந்தால் பின்னுக்கெல்
[லாம் சுகந்தரும்

3. இக்கடன் வருஷந்தோரும் தீர்ந்துவரும்
[கவலைவேண்டாம்

4. வரவேண்டிய கடன் நாள்பேரில்
[சிலதுவரும்

5. உன்மனதிலெண்ணிய காரியம் தானுக
[பூர்த்தியாகும்

6. இவ்வீட்டில்போனபொருள் ஆண்பிள்ளை
[திருடினன் உபாயத்தில் வரும்

7. தப்பித்து போனமாடு நாளின்பேரில்
[கிடைக்கும் வரும்

8. அவ்வூருக்கு ஆளையனுப்பினல் வேலை
[பூர்த்தியாகாமல் கவலையாய் வருவார்

9. இவ்வருஷம் கலியாணம் கஷ்டப்பட்
[டாலு மாகாது கெடுதி விளையும்

Digitized by Roja Muthiah Research Library

# இவருக்கிப்போது பிறக்குங் குழந்தை ஆணோ பெண்ணோ

1. இவருக்கு உதிக்கும் குழந்தை ஆண்
[தான் கவலைவேண்டாம்
2. இவர் மனைவிக்கு வியாதிவுண்டு
[மருந்து வேண்டாம் குழந்தை இல்லை
3. இவருடன் கூடியிருந்தால் விரோதம்
[வரும் பின்னுக்கு சுகமுண்டாகும்
4. இக்கடன் தீராது எல்லார்க்கும் கவலை
[வேண்டாம்
5. வரவேண்டிய கடன் அசல் வட்டியும்
[வரும்
6. உன்மனதிலெண்ணிய காரியம் தனத்
[தினுல் லாபமுண்டாகும்
7. இவ்வீட்டில் போனபொருள் வீட்டார்
திருடினுர் வராது
8. தப்பித்து போனமாடு கீழ்திசை நோக்கி
[இருக்கிறது வீட்டுக்கு வராது
9. அவ்வூருக்கு ஆளையனுப்பினுல் வேலை
[யாகாமல் கவலையுடன் வருவார்

Digitized by Roja Muthiah Research Library

## இக்குழந்தைக்கு பொருள் உண்டோ இல்லையோ

1. இக்குழந்தைக்கு பொருளுண்டு
[ஆயுள் கம்மி

2. இவருக்கு பெண் குழந்தை ஜனனம்
[பாக்கியசாலி ஆவாள்

3. இவருக்கு சக்தி மந்தம் குழந்தைகள்
[வுண்டாகாது

4. இவருடன் கூடிவாழ்ந்தால் மிக
[சுகந்தரும்

5. கடன் விவஹாரத்திறல் தீர்ந்துவிடும்

6. வரவேண்டியகடன் சிலா சிலாவாய்
[வியாபாரத்தினுல் வரும்

7. உன் மனதிலெண்ணிய காரியம் கவலை
[பட்டு ஆலஸ்யமாய் ஆகும்

8. வீட்டில் போனபொருள் பெரிய பொம்
[பளையால் நடந்தது கேட்டால் வரும்

9. தப்பித்து போனமாடு ஸாலாயமாய்
[கிடைத்து வரும்

Digitized by Roja Muthiah Research Library

## இக்குழந்தை பிறந்த முகூர்த்தம் நல்லதா கெடுதியா

1. இக்குழந்தை பிறந்த லக்கினம் கெட்
[டது வியாதி உண்டாகும்
2. பிறந்த குழந்தைக்கு சொத்துண்டு
[பெரியவ நானுல்
3. இவருக்குத் தவம் செய்தால் ஒரு ஆண்
[சிசுவு ஜனனமாகும்
4. இவருக்கு அளவற்ற செல்வம் வுண்டு
[குழந்தையுண்டு பெரியவனுனல்
5. இவருடன் கூடிவாழ்ந்தால் தனலாபம்
[கிடைத்நு நடுமத்தியில் பிரிவார்
6. கடன் பெரிய உத்யோகஸ்தர் முகாந்
[திரமாய் சுலபமாய் தீரும்
7. வர்வேண்டிய கடன் வராது வந்தாலும்
[கொஞ்சமாய் வரும்
8. உன் மனதிலெண்ணிய காரியம்
[இப்போதேயாகும்
9. வீட்டில் போனபொருள் வராது
[கவலைபடாதீர்கள்

Digitized by Roja Muthiah Research Library

## இப்பெண் புஷ்பவதியான லக்கினம் நலமா கெடுதியா

1. இப்புஷ்பவதியான லக்கினம் நலமல்ல [மனக்கவலை யேற்படும்

2. இக்குழந்தை பிரந்தவேளை நல்லதல்ல [வியாதி உண்டாகும்

3. பிரந்த குழந்தைக்கு பொருள்வுண்டு

4. இவருக்கு பெண் குழந்தை சொத்து [நிற்காது

5. இவருக்குபாபம்வுண்டுகுலதேவதையை [தியானித்தால் குழந்தை தரும்

6. இவருடன் கூடிவாழ்ந்தால் நீடூழியா. [யிருக்கலாம்

7. இக்கடன் அனேகவிசை தீர்ந்து [போகும் சீக்கிரமாக

8. வரவேண்டிய கடனை கேட்டால் வராது [தானுகவரும்

9. நீ மனதில் நினைத்த காரியம் ஆகாது [பிரயாசை வேண்டாம்



Digitized by Roja Muthiah Research Library

## இவருடன் சண்டை செய்தால் ஜெயமா அபஜயமா

1. இவருடன் சண்டை செய்தால் ஜெய
[மாகாது

2. இப்புஷ்பவதியான லக்கினம் நல்லதல்ல

3. இக்குழந்தை பிறந்தவேளை நல்லதல்ல
[கண்டம் யிருக்குது

4. பிறந்த குழந்தைக்கு பாக்யமுண்டு
[வித்வானவான்

5. இவருக்கு ஆண் குழந்தை ஜனிக்கும்
[பொருள் நிற்காது

6. இவர் வியாதியஸ்தராவார் ஆகையால்
[குழந்தையில்லை

7. இவருடன் கூடிவாழ்ந்தால் விரோதம்
[ஏற்பட்டு கெட்டுவிடுவாய்

8. இக்கடன் இவ்வருஷம் தீராது மேல்
[வருஷம் தீறும்

9. இக்கடன் விரோதமில்லாமல் வராது

Digitized by Roja Muthiah Research Library

# இந்த ராஜனிடம் பேசினால் இது ஆகுமா ஆகாதா

1. இந்த ராஜனிடம் பேசினால் வேலையெல்
[லாம் பூர்த்தியாகும்
2. இவருடன் சண்டை செய்தால் நலமல்ல
[பிராணபத்து வரும்
3. இப்புஷ்பவதியான லக்கினம் நல்ல
[நல்ல நாள் போக்கவேணும்
4. இக்குழந்தை பிறந்த லக்கினம் நல்ல
[நல்ல
5. இப்பிறந்த குழந்தைக்கு சொத்துண்டு
[வியாபாரி யாவான்
6. இவருக்கு பெண்குழந்தை பிறந்து
[தீரவேணும்
7. இவருக்கு குலதேவதையால் குழந்தைக
[ளுண்டாகும்
8. இவருடன் கூடிவாழ்ந்தால் மிக சுகத்
[தோடிருக்கலாம்
9. இக்கடன் தீர்ப்பதற்கு வழிதேடாமலே
[கெட்டுவிடுவார்

Digitized by Roja Muthiah Research Library

## இவர் சொல்லப்போகிற பொய்
## நிற்குமா நிற்காதா

1. இவர் சொல்லப்போகிற பொய் நின்ரு
[லும் அறிவோடிருக்கவேணும்
2. இராஜனிடம் பேசினல் வேலை பூர்த்தி
[யாகாது வேண்டாம்
3. இவருடன் சண்டை செய்தால் ஜெய
[மடைவாய் நின்று செய்
4. இப்புஷ்பவதியான லக்கினம் நல்லது
[சுகந்தரும்
5. இக்குழந்தை பிறந்த லக்கினம் சுகம்
[மேன்மைதரும்
6. இப் பிறந்த குழந்தைக்கு பொருளுண்டு
[ராஜநேசம் ஏற்படும்
7. இவருக்கு ஆண்குழந்தை ஜனித்து
[ரோகியாவான்
8. இவர் பாபம் செய்தவர் ஆகையால்
[குழந்தைஇல்லை
9. இவருடன் கூடிவாழ்ந்தால் விரோதங்
[கள் வரும்

Digitized by Roja Muthiah Research Library

## இவரை கடன் கேட்டால் தருவாரோ தரமாட்டாரோ

1. இவரை கடன் கேட்டால் தருவார்
[சீக்கிரம் தீராது
2. இவர் சொன்ன பொய் நிற்காது! ஆரை
[விட்டு பிராணைப்த்து வரும்
3. இராஜனிடம் பேசினால் வேலையாகும்
[அன்புவுன்பேரிலிருக்கும்
4. இவரிடம் சண்டை செய்தால் ராஜனால்
[ஜெயமடைவாய்
5. இப்புஷ்பவதியான லக்கினம் வீட்டா
[ருக்காகாது மாமிவீட்டுக்கு நலம்
6. இக்குழந்தை பிறந்த லக்கினம் லக்ஷ்மீ
[கடாக்ஷந்தரும்
7. இப்பிறந்த குழந்தைக்கு பொருளில்லை
[சாந்தம் வகிக்கும்
8. இவர் பொருளுடையவராவர் பெண்
[ஜனனம் தான்
9. இவர் குலதேவதையை பிரார்த்தித்தால்
[குழந்தையுண்டாகும்

Digitized by Roja Muthiah Research Library

# இவருக்கு கடன் கொடுத்தால் வருமோ வராதோ

1. இவருக்கு கடன் கொடுத்தால் வராது
2. இவரை கடன் கேட்டால் தரமாட்டார்
3. இவர் சொன்ன பொய் நிற்கும் ராஜநேச [முண்டு சம்பளம் வுயரும்
4. இராஜனிடம் பேசினல் வேலையாகாது [வேறொருவரால் ஆகும்
5. இவருடன் சண்டைசெய்தால் செலித்து [மேன்மையடைவாய்
6. இப்புஷ்பவதியான லக்கினம் மிக்க [சுபமாகும்
7. இக்குழந்தை பிறந்த லக்கினம் கெடுதி [ரோகத்துடன் பிராணபத்து
8. இப்பிறந்த குழந்தைக்கு பொருளுண்டு [வித்வானவான்
9. இவருக்கு பொருளுண்டு பெண்குழந்தை [பெருவார்

Digitized by Roja Muthiah Research Library

## இவருக்கு மேண்மையுண்டோ இல்லையோ

1. இவருக்கு ஊரில் மேன்மை தரும் அல்ப [லாபம் ஏற்படும்

2. இவருக்கு கடன் கொடுத்தால் சமயத் [துக்கு வராது நாள்பேரில் வரும்

3. இவரை கடன் கேட்டால் தருவார் [சீக்கிரமாய் தீராது

4. இவர் சொன்னபொய் நிற்காது தேசம் [விட்டு போவார்

5. இராஜனிடம் பேசினால் வேலை ஆகும் [நேசமுண்டு

6. இவரிடம் சண்டை செய்தால் ஜெய [மாகும் காலம்போகும்

7. இப்புஷ்பவதியான லக்கினம் நல்லது [சந்தான விருத்தி சுகம்

8. இக்குழந்தை பிறந்த லக்கினம் சுபம் [பொருள் மேன்மை

9. இப்பிறந்த குழந்தைக்கு பொருளுண்டு [தீரமாயிருக்கும்

Digitized by Roja Muthiah Research Library

# இவருக்குவேலை கிடைக்குமோகிடைக்காதோ

1. இவருக்கு வேலை பொருள் சிலவால்
[கிடைக்கும்

2. இவருக்கு வூரில் மேன்மைதரும்
[க்ஷேமமாயிருக்கும்

3. இவருக்கு கடன் கொடுத்தால் சண்டை
[செய்து அபகரிப்பார்

4. இவரை கடன் கேட்டால் தரமாட்டார்

5. இவர்சொல்லும் பொய் நிற்கும் லாபந்
[தான் சொல்லு

6. இராஜனிடம் பேசினல் வேலையாகும்
[நேசம் ஏற்படும்

7. இவனிடம் சண்டை செய்தால் தோல்வி
[யடைவாய் காலம் செல்லும்

8. இப்புஷ்பவதியான லக்கினம் சுபம்
[குழந்தைகள் விருத்தி

9. இக்குழந்தை பிறந்த லக்கினம் கெடுதி
[தகப்பனுக்கு கண்டம்

Digitized by Roja Muthiah Research Library

இவ்வருஷம் யுத்தம் நடக்குமோ நடக்காதோ

1. இவ்விசை சண்டை தெற்கே முகமாய் [செய்து கெலிப்பார்

2. இவருக்கு வேலைகிடைக்கும் வேறொரு [வர் கொடுப்பார்

3. இவருக்கு ஊரில் மேன்மையில்லை கெடுதி [சம்பவிக்கும்

4. இவருக்கு கடன் கொடுத்தால் வராது [தரவேண்டாம்

5. இவரை கடன் கேட்டால் தருவார்

6. இவர்சொன்ன பொய் நிற்கும் ராஜநேச [முண்டு

7. இராஜனிடம்பேசினுல்வேலைகிடைக்காது

8. இவருடன் சண்டை செய்தால் தேர்ச்சி [யுண்டாவாய்

9. இப்புஷ்பவதியான லக்கினம் நலமல்ல [சீக்கிரத்தில் புருஷன் சாவான்

Digitized by Roja Muthiah Research Library

## இவ்வருஷம் வேறுராஜன் வருவானே வரமாட்டானே

1. வேறுராஜன் வந்து மத்தியில் அபமானப்பட்டு போவான்
2. இவ்விசை சண்டை கீழ்முகம் நோக்கி அபஜயமடைவார்
3. இவருக்கு வேலை கிடைக்காது வேறொருவரால் கிடைக்கும்
4. இவருக்கு வூரில் மேன்மைதரும் வுத்யோக மேன்மையுண்டாகும்
5. இவருக்கு கடன் கொடுத்தால் அசல் வட்டியுடன் வரும் லாபம்
6. இவரை கடன் கேட்டால் தருவார் இராஜநேசமும் கிடைக்கும்
7. இவர் சொன்ன பொய் நிற்காது இடம் விட்டு மாறுவார்
8. இராஜனிடம் பேசினல் வேலைகிடைக்கும் ஜெயமுண்டு
9. இவரிடம் சண்டை செய்தால் கெலிப் பாய் பொருள் தரும்

